# செய்தி வெளியீடு

**<u>ஆன்லைன் மூலம் வர்த்தகம் செய்யும் வணிகர்கள் உரிய வணிகவரி செலுத்துவதுடன் வாடிக்கையாளர்களுக்கு உரிய ரசீது வழங்கி வர்த்தகம் செய்ய வேண்டும். வணிகவரித்துறை ஆணையர் அறிவிப்பு.</u>**

தமிழ்நாட்டில் ஆன்லைன் வர்த்தகம் வேகமாக வளரும் சூழ்நிலையில் அதில் ஈடுபடும் வணிகர்கள் தமிழ்நாட்டிற்கு கட்டவேண்டிய வாட் (VAT) வரியினை செலுத்துவதில்லை என்று சமீபத்திய புலனாய்வில் தெரிய வருகிறது.

ஆன்லைன் வர்த்தகம் மூலம் பல கோடிகளுக்கு வர்த்தகம் செய்த ஒரு வணிகர் அந்த வர்த்தகத்தில் ஒரு சிறிய பகுதியை மட்டுமே அரசக்கு தெரிவித்து வரி ஏய்ப்பு செய்துள்ளது புலனாய்வில் கண்டுபிடிக்கப்பட்டு வரி மற்றும் தண்ட தொகை வசூலிக்க சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் அத்தகைய வணிகர்களின் வங்கி கணக்குகள் விபரங்கள் பெறப்பட்டு உரிய வரியினை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்தகைய வரிஏய்ப்பு செய்யும் வணிகர்கள் மீது தமிழ்நாடு மதிப்பு கூட்டுவரி சட்ட பிரிவு 71–ன்படி (TNVAT Act, 2006 Sec. 71) நீதிமன்றம் மூலம் சட்ட நடவடிக்கை தொடரப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

ஆன்லைன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள நுகர்வோர் கொள்முதல் செய்யப்படும் சரக்குகள் மீது தமிழ்நாடு மதிப்புக்கூட்டுவரி செலுத்தப்பட வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள வணிகர் வெளிமாநிலத்தில் உள்ள நுகர்வோருக்கு ஆன்லைன் மூலம் விற்பனை செய்தால், இவ்விற்பனை மீது மத்திய விற்பனைவரி செலுத்த வேண்டும். ஆன்லைன் மூலம் வெளிமாநிலத்தில் இருந்தோ, தமிழ்நாட்டிலிருந்தோ தமிழ்நாட்டிலுள்ள நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டால், இவ்வாறு விற்பனை செய்யப்படும் வாகனங்களுக்கு விற்பனை விலையின் மீது 12.5 % தமிழ்நாடு நுழைவு வரி செலுத்தப்பட வேண்டும். மேற்கண்ட வரி விதிப்பு, பொருட்கள் மட்டுமல்லாமல், மென்பொருட்கள், மின்னனு புத்தகங்கள், இணையிறக்கம் செய்யப்படும் பாடல்கள் ஆகியவை மீதும் விதிக்கப்படும்.

எனவே, ஆன் லைன் மூலம் மேற்கொள்ளும் வர்த்தகத்தினை விடுதல் இன்றியும், உரிய காலத்திற்குள்ளும் வெளிப்படை தன்மையுடன் அரசுக்கு தெரிவித்து வரியினை செலுத்த அறிவுறுத்தப்படுகிறது. தவறும் ஆன் லைன் வணிகர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்கள் ஆன் லைன் மூலம் வாங்கும் பொருட்களுக்கு உரிய ரசீதை விற்பனையாளரின் முழு முகவரி (ம) பதிவு எண்ணுடன் (TIN) கேட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டும். அவ்வாறு ரசீது பெற்றால்தான் அது நுகர்வோரின் உரிமையையும் வாங்கும் பொருட்களுக்கு உரிய உரிமையும் குறையேற்பட்டால் அதற்குறிய பாதுகாப்பும் பெற வழிவகுக்கும். ஆன் லைன் மூலம் வர்த்தகம் செய்யும் பொழுது வணிகர்கள் உரிய ரசீது தரவில்லை என்றால் பொதுமக்கள் விற்பனை செய்த வணிகர்களின் முகவரியுடன் கீழ்க்கண்ட வணிகவரி அலுவலகத்தை தொடர்பு கொண்டு புகார் செய்யலாம். இவ்வாறு வணிகவரித்துறை ஆணையர் திரு. க. ராஜாராமன் இ.ஆ.ப. கேட்டுக்கொள்கிறார்.

முதன்மை செயலர் / ஆணையர்
இரண்டாம் தளம், எழிலகம்,
சென்னை – 600 005.
மின்னஞ்சல் முகவரி : cct@tn.gov.in
நிகரி : 044 - 2854 6755
044 - 2855 1864

முதன்மை செயலர் (ம) வணிகவரி ஆணையர்